DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC.67/2020

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.பானுமதி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2, A4 present. A3 died)

05.03.2026 – 12.55 PM

முதல் விசாரணை:–

1. நான் தற்போது திணைக்குளம் கிராமத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 எனது கணவர். பட்டியல் சாட்சிகள் 2, 4, 5 ஐ எனக்கு தெரியும்.

2. முகமது இக்பால் என்பவருக்கு சொந்தமான தோட்டம் வாலிநோக்கத்தில் உள்ளது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அந்த தோட்டத்தில் சுமார் 4, 5 நபர்கள் மாங்காய்களை திருடிக்கொண்டிருந்தார்கள். நானும், எனது கணவர் சரவணசுரேஷ் தோட்ட உரிமையாளர் இக்பால், மகேஸ்வரி, தமிழ்ச்செல்வி ஆகியோர்கள் திருட வந்த நபர்களை சத்தம் போட்டோம். அவர்கள் ஓடிவிட்டார்கள். அவர்களை யார் என்று எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

பிறழ் சாட்சி:–

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –**

கடந்த 19.03.2016ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் நானும், நாங்கள் வேலை பார்த்த தோட்டத்தின் உரிமையாளர் இக்பால் அ.சா.1,

மகேஸ்வரி, தமிழ்ச்செல்வி ஆகியோர்கள் தோட்டத்தில் இருக்கும் போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து மாங்காய்களை திருடிக்கொண்டு இருந்தார்கள் என்றும், நாங்கள் அவர்களை சத்தம் போட்டவுடன் எதிரிகளை எங்களை பார்த்து அசிங்கமாக பேசி கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் உள்ளூர்காரர்கள் என்பதால் எதிரிகளுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:48:52 +0530